# ஃபர்ளான தொழுகைக்குப் பின் ஓத வேண்டிய திக்ர்கள்

❶ اَسْتَغْفِرُ اللهَ، اَسْتَغْفِرُ اللهَ، اَسْتَغْفِرُ اللهَ.

நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்.

❷ اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ تَبَارَكْتَ يَاذَا الْجَلَالِ وَالْإِكْرَامِ

யா அல்லாஹ் நீ குறையற்றவன். உன்னிடமிருந்துதான் குறையில்லா நிலை ஏற்படும். மகத்துவமும் கண்ணியமும் உடையவனே! நீ மிகப் பரிசுத்தமானவாக ஆகிவிட்டாய்

❸ سُبْحَانَ اللهِ 33، اَلْـحَمْدُ لِلّٰهِ 33، اَللّٰهُ اَكْبَـرُ 33 ، لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَاشَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرُ

அல்லாஹ்வை நான் பரிசுத்தப்படுத்துகின்றேன் 33 தடவை[1]. அனைத்து புகழும் அல்லாஹ்விற்கே 33 தடவை. அல்லாஹ் மிகப் பெரியவன் 33 தடவை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை துணை இல்லை; அவனுக்கே ஆட்சி அனைத்தும் உரியது; அவனுக்கே புகழ் அனைத்தும் உரியது; அவன் அனைத்து பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன்.

❹ لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَاشَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرُ، اَللّٰهُمَّ لَا مَانِعَ لِمَا اَعْطَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْـجَدِّ مِنْكَ الْـجَدِّ.

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை துணை இல்லை; அவனுக்கே ஆட்சி அனைத்தும் உரியது; அவனுக்கே புகழ் அனைத்தும் உரியது; அவன் அனைத்து பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன். யா அல்லாஹ் நீ கொடுத்ததை தடுப்பவர் யாரும் இல்லை. நீ தடுத்ததை கொடுப்பவர் யாரும் இல்லை. மேலும், செல்வந்தனின் செல்வம் உன்னிடத்தில் பயனளிக்காது.

❺ لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَاشَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرُ لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ لَا اِلٰـهَ اِلَّا اللهُ وَلَا نَعْبُدُ اِلَّا اِيَّاهُ لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ لَا اِلٰـهَ اِلَّا اللهُ مُـخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ.

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை துணை இல்லை; அவனுக்கே ஆட்சி அனைத்தும் உரியது; அவனுக்கே புகழ் அனைத்தும் உரியது; அவன் அனைத்து பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன். பாவத்திலிருந்து மீளவோ, நன்மை செய்ய ஆற்றல் பெறவோ முடியாது அல்லாஹ்வைக்

1. அல்லாஹ்வை நான் பரிசுத்தப்படுத்துகின்றேன் என்பதின் அர்த்தம்: இணைவைப்பாளர்கள் உனக்கு மகன், மகள், மனைவி, நிகர் உண்டு என்பதாக அவர்கள் உன் மீது இட்டுக்கட்டும் அபாண்டமான வார்த்தைகளிலிருந்து உன்னை நான் தூய்மைப் படுத்துகின்றேன்

கொண்டே தவிர! வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை; அவனைத் தவிர வேறு யாரையும் வணங்கமாட்டோம்; அவனுக்கே அருட்கொடை அனைத்தும் உரியது; அவனுக்கே கிருபை அனைத்தும் சொந்தமானது; அவனுக்கே அழகிய புகழ் அனைத்தும் சொந்தமானது; வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை; காஃபிர்கள் (நிராகரிப்பாளர்கள்) வெறுத்தாலும் சரியே, வணக்க வழிபாட்டை அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கி வைக்கிறோம்.

❻ اَللّٰهُ لَا إِلٰـهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ لَا تَأْخُذُهُ سِنَةٌ وَلَا نَوْمٌ لَهُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ مَنْ ذَا الَّذِي يَشْفَعُ عِنْدَهُ إِلَّا بِإِذْنِهِ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ وَسِعَ كُرْسِيُّهُ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَلَا يَئُودُهُ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ

அல்லாஹ், அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை. (அவன்) உயிருள்ளவன், (என்றென்றும்) நிலைத்திருப்பவன், அவனை சிறு தூக்கமும், உறக்கமும், பீடிக்காது. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; அவனுடைய அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்து பேசுபவர் யார்? அவர்களுக்கு முன்னால் இருப்பவற்றையும், பின்னால் இருப்பவற்றையும் அவன் நன்கறிவான். அவன் நாடியதைத் தவிர அவனின் அறிவிலிருந்து எதையும் (யாராலும்) அறிந்து கொள்ளமுடியாது. அவனுடைய ‘குர்ஸிய்’ வானங்களிலும், பூமியிலும் விசாலமாக இருக்கின்றது. அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்காது. மேலும் அவன் மிக்க உயர்ந்தவன், மகத்துவமிக்கவன்.

❼ قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ﴿1﴾ مِن شَرِّ مَا خَلَقَ﴿2﴾ وَمِن شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ﴿3﴾ وَمِن شَرِّ النَّفَّاثَاتِ فِي الْعُقَدِ﴿4﴾ وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ﴿5﴾

(நபியே! நீர் கூறுவீராக! வைகறையின் இரட்சகனிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். அவன் படைத்தவற்றின் தீங்கைவிட்டும், இருள் படரும் போது (ஏற்படும்) தீங்கைவிட்டும், மேலும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கைவிட்டும், பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும்போது (ஏற்படும்) தீங்கைவிட்டும் (நான் பாதுகாப்புத் தேடுகிறேன்).

❽ قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ﴿1﴾ مَلِكِ النَّاسِ﴿2﴾ إِلٰـهِ النَّاسِ﴿3﴾ مِن شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ﴿4﴾ الَّذِي يُوَسْوِسُ فِي صُدُورِ النَّاسِ﴿5﴾ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ﴿6﴾

(நபியே!) நீர் கூறுவீராக! மனிதர்களின் இரட்சகனிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். (அவன்தான்) மனிதர்களின் அரசன். (அவனே) மனிதர்களின் (வணக்கத்திற்குரிய) நாயன். பின்னால் பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களைக் கிளப்பக்கூடியவ(னான ஷைத்தா)னின் தீங்கைவிட்டும் (நான் பாதுகாப்புத் தேடுகிறேன்). அவன் எத்தகையவனென்றால், மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களைக் கிளப்பிவிடுகிறான். (இத்தகையோர்) ஜின்களில் மற்றும் மனிதர்களில் இருக்கின்றனர்.